# ஒலிக்கும் யாதவர் முரசு
# OLIKKUM YADAVAR MURASU

| Volume : 17 | Issue : 03 | December 2021 | Tamil Monthly | Price Rs. 10/- | Annual Subscription Rs.150 |
|---|---|---|---|---|---|
| முரசு : 17 | ஒலி : 03 | டிசம்பர் – 2021 | தமிழ் மாத இதழ் | விலை ரூ. 10/- | ஆண்டு சந்தா ரூ150/- |

ஸ்ரீ பிலவ வருடம், மார்கழி – தை மாதம்


உறவுகளோடு
இணைவோம், உயர்வோம்

யாதவமே பாரதம்
பாரதமே யாதவம்

## அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்!



மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் !
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் !
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏராந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.








ஸ்ரீ கண்ணபிரான் துணை







# இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்

முத்தமிழறிஞர்
தலைவர் டாக்டர்
**கலைஞர்**
அவர்களின் நல்லாசியோடும், மாண்புமிகு
தமிழக முதல்வர் **தளபதி மு.க.ஸ்டாலின்**
அவர்களின் நல்வாழ்த்துகளோடும் 2021-ஆம் ஆண்டு
டிசம்பர் 30-ந் தேதி பிறந்த நாள் காணும்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிவகங்கை
மாவட்ட கழக செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

## மாண்புமிகு K.R. பெரியகருப்பன்

B.Com., B.L., MLA

அவர்கள், அவர்களது குடும்பமும் ஸ்ரீ கண்ணபிரான் திரு அருளால் எல்லா வளமும், நலமும், புகழும், குன்றாத இளமையும் பெற்று பல்லாண்டு பல்லாண்டு பல நூறு ஆண்டுகள் வாழ ஸ்ரீ மான் நாராயணனை பிரார்த்தித்து கொள்கிறேன்.

ADV

அன்புடன் **N.I.சக்திவேல்**
மாநில செயலாளர், தமிழ்நாடு யாதவ மகாசபை, சென்னை – 600 002.

முரசு 17 ஒலி 2

# ஒலிக்கும் யாதவர் முரசு

யாதவர் பேரவையின் செய்தி மாத இதழ்

டிசம்பர் 2021

ஆசிரியர்
டாக்டர். ஆர். காந்தையா, M.S. (General)
இணை ஆசிரியர்
திரு. ஜி. உலகநாதன் யாதவ், எம்.ஏ., பி.எல்.

"கல்வி அறியாதவனே இல்லை என்று சொல்லும் காலம் வரவேண்டும் கற்றவனும் கொற்றவன்போல் வாழவேண்டும்"

## பெருமை மிகு யாதவர் குலத்தில் நன்கறிந்த ஒருவரை பற்றி இங்கு காண்போம்.

இளம் தொழிலதிபர் .தலைமை பண்புகள் நிறைந்தவர். எடுக்கும் செயல்களில் நல்ல நிபுணத்துவம் பெற்றவர். நமது பெருமை மிகு யாதவர் குல சமூக சேவகர். உயர்ந்த நமது குலத்தில் தனித்துவம் பெற்றவர். (Iconic person) தமிழ்நாடு யாதவர் பேரவையின் மாநில தலைவர். சேலம் மாநகரம் மற்றும் தமிழகம் முழுவதும் நன்கறிந்த பண்பில் உயர்ந்த திருமிகு. ஜி.ஜி.கண்ணன் எனும் ஜி.ஜி.கே. யாதவ் அவர்கள், நமது பெருமைமிகு சமாஜ்வாடி கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் உத்தர பிரதச முதல்வரும் ஜுனியர் நேதாஜியுமான. ER.அகிலேஷ் யாதவ் அவர்களை உத்திர பிரதச மாநில தலைநகர் லக்னோ மாநகரில் கோமதி நகரிலுள்ள அவரது அதிகாரபூர்வ இல்லத்தில் சந்தித்தார் என்னும் நிகழ்வு நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருவதாக அமைந்துள்ளது.

இது நாள் வரையிலும் மற்றும் வருங்காலத்திலும் அவர் நிகழ்த்தும் சாதனைகளையும் சேவைகளையும் பாராட்டுகிறோம் அவரது மேதகு குடும்பத்திற்கும் யாதவ சொந்தங்களுக்கும் நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.
உலக யாதவ அமைப்பு

**WORLD YADAVA'S ORGANIZATION !!!**



# வன்னியர் இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட்ட பின்னணி என்ன?

வன்னியர்களுக்கான 10.5 சதவீத தனி இடஒதுக்கீட்டுச் சட்டம் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையால் ரத்துசெய்யப்பட்டிருப்பது, வடமாவட்டங்களில் அதிர்ச்சியையும், தென்மாவட்டங்களில் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது. இடஒதுக்கீட்டின் அடுத்த கட்டமாக, ஒவ்வொரு சாதிக்கும் தனி ஒதுக்கீடு வழங்கு வதற்கான முதல்படி என்று கருதப்பட்ட, வன்னியர் இடஒதுக்கீடு எப்படி ரத்தானது? தேர்தல் நேரத்தில் அவசர அவசரமாக இடஒதுக்கீட்டைக் கொண்டுவந்ததால் அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், பாமக நிறுவனர் ராமதாஸும் எந்தெந்த விஷயங்களில் கோட்டைவிட்டார்கள் என்பதை அலசுகிறது இந்தக் கட்டுரை. **மக்கள் பார்வையில்...

* மேலோட்டமாகப் பார்க்கும்போது, வன்னியர்களுக்கான 10.5 சதவீத தனி இடஒதுக்கீட்டுச் சட்டம் வரவேற்கத்தக்கதாகவே தெரியும். * மருத்துவர் ராமதாஸ் போன்ற தலைவர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் இருந்தால், அந்தச் சமூகங்களுக்கும் அதிகாரமும் வாய்ப்பும் பரவலாகுமே எனும் ஏக்கம்கூட வரும்.

* ஆனால், இந்தச் சட்டத்துக்கு எதிராக மதுரை, தேனி மாவட்டங்களில் பிரமலைக் கள்ளர் (சீர் மரபினர்) ஏன் போராட்டம் நடத்துகிறார்கள் என்று கவனித்தபோதுதான் புரிந்தது, இது வெறும் வன்னியர் தனி இடஒதுக்கீட்டுச் சட்டமல்ல, ஒட்டுமொத்த எம்பிசி பட்டியலையே 3 பிரிவாகப் பிரிக்கும் சட்டம்; ஒரே ஒரு சாதியின் தலைவர் கோரிக்கையை ஏற்று, எஞ்சியுள்ள 115 சாதிகளின் கருத்தைக் கேட்காமல் நிறைவேற்றப்பட்ட சட்டம் என்பது.

* எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால், வன்னியர்கள் இந்த இடஒதுக்கீட்டுக்கு முற்றிலும் தகுதியானவர்கள் தான். * ஆனால், இந்தச் சட்டமானது எவ்வளவு அவசரமாக, பின்விளைவுகள் பற்றி யோசிக்காமல், தேர்தல் லாபத்தை மட்டுமே கணக்கில்வைத்து கொண்டுவரப்பட்டது என்பதைப் பிற சாதியினர் தங்கள் போராட்டங்களின் மூலம் அழுத்தமாகப் பதிவுசெய்திருக்கிறார்கள். **பிரபல வழக்கறிஞர்கள்.

* தென்தமிழகத்தில் இடஒதுக்கீடு குறித்த அக்கறையே இல்லாமல், ஆண்டசாதி பெருமிதத்துடன் இருந்த சில சமூகங்கள் வன்னியர்களுக்கான இடஒதுக்கீடு அறிவிக்கப்பட்ட பிறகு விழித்துக்கொண்டன.

* குறிப்பாக, அந்தச் சமூகங்களில் படித்து, பெரிய பெரிய அதிகாரியாகப் பணிபுரிந்தவர்கள் நீதிமன்றத்தை நாடினார்கள். * நிறைய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன என்றாலும், உரிய ஆவணங்கள் இருந்த 40 மனுக்கள் மட்டுமே விசாரணைக்கு ஏற்கப்பட்டன. * இவர்கள் சார்பில் ஆஜரானவர்களில் விஜயன், சண்முகசுந்தரம் உள்ளிட்ட சில வழக்கறிஞர்கள் மட்டுமே பிரபலமானவர்கள். * பலர் பெரிதாகக் கட்டணம் வாங்காத, சாதாரண வழக்கறிஞர்களே.

* வழக்கில் பாமகவும் இணைந்துகொண்டதைத் தொடர்ந்து, அக்கட்சியின் சார்பில் புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் ஆஜரானார்கள். * ராமதாஸ் சார்பில் மூத்த வழக்கறிஞர் மாசிலாமணி ஆஜரானார். * இவர் கருணாநிதி, ஜெயலலிதாவுக்கே சட்ட ஆலோசனை சொன்னவர். * இஸ்லாமியர்களுக்கு அரசு 3.5 சதவீத இடஒதுக்கீடு கொண்டுவந்தபோது, இவர்தான் தலைமை அரசு வழக்கறிஞர். * வன்னியர் சங்கம் சார்பில் ஆஜரான சோமயாஜி, ஜெயலலிதா ஆட்சியில் தமிழக அரசின் தலைமை வழக்கறிஞராக இருந்தவர். * திமுகவின் சட்டதிட்டங்களை உருவாக்கிய வி.பி.ராமனின் மகனும், பிரபல வழக்கறிஞருமான பி.எஸ்.ராமன், * வழக்கறிஞர்கள் கே.பாலு, ஓம் பிரகாஷ் என்று ஆஜரான அத்தனை பேருமே வலுவான ஆட்கள். * குறிப்பாக, சமூகநீதி விஷயத்தில் கரைகண்ட வழக்கறிஞர்கள். இந்த வழக்குகள் அரசுக்கு எதிரானவையும்கூட என்பதால், அரசு வழக்கறிஞர் இந்த வழக்கை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று பாமக சார்பில் தனியே வகுப்பெடுக்கப்பட்டது.

**சட்டத்தில் என்ன பிரச்சினை?**

அப்படியிருந்தும், வன்னியர் ஒதுக்கீடு ரத்து செய்யப்பட காரணம் என்ன? **

* வழக்கில் வெற்றிபெற்ற மனுதாரர்களில் ஒருவரும், சீர்மரபினர் நலச்சங்கச் செயல்தலைவருமான பி.ராமசாமியிடம் பேசினோம். * பழனிசாமி அரசு பிப்ரவரி 27-ல் சட்டம் போட்டது. மார்ச் 9-ம் தேதியே அதற்குத் தடை கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோம். * உடனே தடைவிதிக்க முடியாது; மாநில அரசிடம் கருத்து கேட்கிறோம் என்று கூறி, 6 வாரத்தில் பதில் சொல்லுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம். * அதற்குள்ளாகத் தேர்தல் வந்துவிட்டது. அதைக் காரணம் காட்டி, தமிழக அரசு கூடுதல் அவகாசம் வாங்கிவிட்டது. * அடுத்துவந்த அரசாங்கமும், உச்ச நீதிமன்றத்தில் பதில் சொல்லாமல், வன்னியர் இடஒதுக்கீட்டுச் சட்டத்தை அமல்படுத்தத் தொடங்கிவிட்டது.

**இதெல்லாம் நடக்கும் என்றறிந்து, சென்னை உயர் நீதிமன்றத்திலும் வழக்குப் போட்டோம். **

* 1983-ல் அமைக்கப்பட்ட அம்பாசங்கர் அறிக்கையின் அடிப்படையில்தான் இடஒதுக்கீடு கொடுப்பதாகச் சொல்லியிருந்தது அதிமுக அரசு. * சட்டத்தை அமல்படுத்திய இன்றைய திமுக அரசும் அதையேதான் சொன்னது. * எனவே, முதலில் அம்பாசங்கர் ஆணையத்தின் அறிக்கையைச் சேலஞ்ச் செய்தோம். * அந்த ஆணையத்தின் தலைவரான அம்பாசங்கர் ஒரு வன்னியர். * **மொத்தம் 21 உறுப்பினர்கள் கொண்ட அந்த ஆணையத்தில் 14 உறுப்பினர்கள், தலைவரின் அறிக்கை தவறானது என்று அப்போதே தனியே ஒரு அறிக்கையை அரசிடம் கொடுத்துவிட்டார்கள். **

* **ஆக, அது ஆணையத்தின் அறிக்கையல்ல, ஆணையத் தலைவரின் தனிப்பட்ட அறிக்கை என்று நீதிமன்றத்தில் ஆதாரங்களுடன் நிரூபித்தோம்.**

* கூடவே, அதற்கு முன்பு போடப்பட்ட 1978 சட்டநாதன் ஆணையம் கொடுத்த சாதிவாரி மக்கள் தொகை குறித்த புள்ளிவிவரத்தை, எந்தக் கள ஆய்வும் செய்யாமல் அம்பாசங்கர் மாற்றிவிட்டார் என்பதையும் நிரூபித்தோம். * அதாவது, 1978 அறிக்கையில் 27 லட்சமாக இருந்த வன்னியர் மக்கள் தொகையை 1983 அறிக்கையில் 67 லட்சம் என்று மாற்றிய அவர், சீர்மரபினரின் மக்கள் தொகையைப் பாதியாகக் குறைத்துவிட்டார் என்பதற்கான ஆதாரங்களைக் காட்டினோம். * அம்பாசங்கர் ஆணையம் வன்னியர் 13 சதவீதம் இருப்பதாகச் சொன்னது தவறு என்று அப்போதே சர்ச்சை எழுந்ததால், அன்றைய அரசு மாவட்ட ஆட்சியர்களிடம் அறிக்கை கேட்டது. * அவர்களோ வன்னியர்கள் 8.28 சதவீதம்தான் இருக்கிறார்கள் என்று அறிக்கை தந்தார்கள். * அதையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தோம்.

**கடைசியில் அரசுத் தலைமை வழக்கறிஞரே**

* **ஆமாம் அம்பாசங்கர் ஆணையத்தின் பரிந்துரையில் குளறுபடி இருக்கிறது என்று ஒப்புக் கொண்டார்.**

* இதேபோல இடஒதுக்கீடு தொடர்பாக உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் ஏற்கெனவே வந்த தீர்ப்புகள், சட்டங்கள் எல்லாவற்றையும் மேற்கோள் காட்டினோம். * **அதன் அடிப்படையில் நீதிமன்றம் 7 கேள்விகளைக் கேட்டது. அதற்கு பாமக தரப்பிலும், அரசு தரப்பிலும் சரியான விளக்கம் தர முடியவில்லை**. * எனவே, சட்டத்தை ரத்து செய்து நீதிமன்றம் உத்தரவிட்டது என்றார் ராமசாமி.
**நீதிமன்றம் கேட்ட கேள்விகள்**

* அந்த 7 கேள்விகள் என்ன என்பதை, வாசகர்களான நீங்கள் அறிந்திருப்பீர்கள். * நீதிமன்றத்தில் பதில் சொல்ல முடியாத அந்தக் கேள்விகளுக்கு, எல்லாம் முடிந்த பிறகு ரொம்பச் சிரமப்பட்டு அறிக்கை வாயிலாக மருத்துவர் ராமதாஸ் கொடுத்த பதில்களையும் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்.

* எனவே, இங்கே அதுபற்றி ஓரிரு வரிகளில் சொல்லிக் கடந்துவிடலாம்.

* 2018-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 102-வது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, யார் பிற்படுத்தப்பட்டோர் என்று வரையறை செய்வதற்கான அதிகாரம் குடியரசுத் தலைவருக்குத்தான் உண்டு (அதாவது, நாடாளுமன்றத்தில் சட்டம் போட்டு அவரிடம் ஒப்புதல் பெற வேண்டும்). **இதில் மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறதா என்று கேட்டது நீதிமன்றம். **

* **11.8.2021-ல் மீண்டும் அந்தச் சட்டம் திருத்தப்பட்டு (105) மாநில அரசுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு விட்டதே என்றது பாமக. ஆனால், புதிய திருத்தம் வருவதற்கு முன்பே வன்னியர் ஒதுக்கீட்டுச் சட்டம் போடப்பட்டது எப்படி என்று நீதிமன்றம் கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை.**

* **35 ஆண்டுகளுக்கு முன்புள்ள அம்பாசங்கர் கமிட்டி அறிக்கையின் அடிப்படையில் இன்று இடஒதுக்கீடு தர முடியுமா? அப்போதைய கல்வி, பொருளாதாரச் சூழல் வேறு, இன்று வேறு. அப்டேட்டட் டேடா எங்கே? என்று கேட்டது நீதிமன்றம்.** * இதற்கும் திருப்தியான பதில் இல்லை. * **தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பு தேர்தல் முடிவையே மாற்றுவதுபோல ஒரு சட்டம் போட்டால் அது செல்லாது என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறதே, தெரியாதா என்ற கேள்விக்கும் பதில் இல்லை. **

* இதையடுத்து ரத்தானது வன்னியர் இடஒதுக்கீட்டுச் சட்டம். **விதைப்பவன் ஒருவர், **அறுவடை இன்னொருவருக்கா?**

* ‘‘இடஒதுக்கீட்டிற்காக, வன்னியர் சங்கமாக இருந்த காலத்தில் இருந்தே போராடிய கட்சி பாமக. * மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டிற்காக, எத்தனையோ வன்னியர்கள் உயிர்த்தியாகம் செய்திருக்கிறார்கள். * ஆனால், அதன் பலனை பிற 115 எம்பிசி, டிஎன்டி சமூகங்களும்தானே அனுபவிக்கின்றன? * தங்கள் போராட்டத்தின் முழுப்பலனை அடையும் முயற்சியின் ஒரு பகுதிதானே பாமகவின் 10.5 சதவீத தனி ஒதுக்கீடு கோரிக்கை?’’ என்று கேட்டால், மற்ற சமூகத்தினரால் நேரடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. * ஆனால், ‘‘அன்று நாங்கள் விழிப்புணர்வு இல்லாமல் இருந்தோம் என்பதை ஒப்புக்கொள்கிறோம். இன்று எங்களுக்கும் விழிப்புணர்வு வந்துவிட்டது. * எங்களது உரிமை பறிபோகிறபோது குரல் கொடுக்கிறோம். * எம்பிசி பட்டியலுக்குள் சாதிய மேலாதிக்கம் செய்யப் பார்க்கிறது பாமக. எனவேதான் போராடுகிறோம்‘‘ என்கிறார்கள்.

**இதுபற்றி நம்மிடம் விரிவாகப் பேசிய இன்னொரு மனுதாரரும், அனைத்து மறவர் நலக் கூட்டமைப்பு நிர்வாகியுமான செ.விஜயகுமார் (இவர் ஓய்வுபெற்ற அரசு உயரதிகாரியும்கூட)**, * ‘‘தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் தலைவராக இதுவரையில் நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வன்னியர்கள். * உயர் அதிகாரிகளும் வன்னியர்களே. * **இதனால், அந்தத் துறையே ஒரு சாதிக்கான துறை போல ஆகிவிட்டது. **

**சம்பளம் வாங்குவது நம் வரிப்பணத்தில், ஆனால், விசுவாசம் காட்டுவது பாமகவிடத்தில் என்று செயல்படுகிறார்கள். **

**சட்டநாதன் ஆணையம், அம்பாசங்கர் ஆணையம், எடப்பாடி அமைத்த குலசேகரன் ஆணையம் எல்லாவற்றின் தலைவர்களும் வன்னியர்கள்தான். **

* இதுதான் இந்த ஒருதலைப்பட்சமான சட்டத்துக்கு அடிப்படைக் காரணம். * எனவே, இனிவரும் காலங்களிலாவது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்துக்கு வன்னியர் அல்லாத பிற சாதியினரை தலைவராக நியமிக்க வேண்டும் என்றார்.

**மேலும்,** * எடப்பாடி அரசு செய்த தவறுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கை ஏற்று, சட்டத்தை உயர் நீதிமன்றம் ரத்து செய்திருக்கிறது. * அந்த உத்தரவை தமிழக அரசு மதிக்க வேண்டும். * ஆனால், மேல்முறையீட்டிற்குப் போயிருக்கிறது அரசு. * உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் பதில் கேட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. * **அதற்கு இன்னமும் பதில் சொல்லாத அரசு, உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்த மறுநாளே மேல்முறையீடு செய்ய முயல்வது நியாயமற்ற செயல்**.

* மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 20 சதவீதம் ஒதுக்கீடு வழங்கியது கலைஞர். * அதை இன்றைய திமுக அரசு உரிய காரணங்களோ, தரவுகளோ இல்லாமல் பிரிக்கக்கூடாது. உடனே சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும். * மத்திய அரசு அறிவுறுத்தியும், ராமதாஸ் எதிர்த்தார் என்ற ஒரே காரணத்-துக்காக நிறுத்தப்பட்டுள்ள சீர்மரபினர், நாடோடிகள், அரை நாடோடிகள் குறித்த கணக்கெடுப்பை உடனே நடத்த வேண்டும்.

* முஸ்லிம்களுக்கும், வன்னியர்களுக்கும் உரிய கணக்கெடுப்பை நடத்தி ஆவணங்களின் அடிப்படையில்தான் கருணாநிதி உள்ஒதுக்கீடு கொடுத்தார். * அதேபோல சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி, அதில் எம்பிசியில் 90 சதவீதம் பேர் வன்னியர்கள்தான் என்று முடிவு வந்தால்கூட, அதை அப்படியே செயல்படுத்த நாங்கள் மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறோம்'' என்றார் விஜயகுமார்.

* தேர்தல் நேரத்திலும் சரி, நீதிமன்றத்திலும் சரி இந்த விவகாரம் வன்னியருக்கும், முக்குலத் தோருக்கும் இடையிலான மோதல் போலவே காட்சியளிக்கிறது. * **உண்மையில் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்போர், வண்ணார், மருத்துவர், குலாலர், போயர், ஒட்டர் போன்ற சிறுகுறு சமூகங்களே. **

* இவர்களுக்கு முன்னுரிமை தருவது பற்றி யாருமே பேசவில்லை என்று வருந்துகிறார் டி.வி.பி. மக்கள் கட்சித் தலைவர் மணிபாலா.

* ``அரசியல், பொருளாதார பலம்மிக்க வன்னியர், மறவர், பிரமலைக் கள்ளர் போன்றோரோடு எங்க-ளால் போட்டி போடவே முடியவில்லை. * எங்களுக்கு முன்னுரிமை கேட்டால், ஒட்டுக்காக வன்னியருக்கு ஒதுக்கீடு தந்துவிட்டார் எடப்பாடி. * ஸ்டாலினும் எங்கள் கோரிக்கையைக் கண்டுகொள்ளவில்லை. * பெரும்பான்மையினருக்குத்தான் எல்லாச் சலுகையும் என்றால், நாங்கள் எல்லாம் என்ன செய்வது, இதுதான் சமூகநீதியா?'' என்று வேதனையுடன் கேட்கிறார் மணிபாலா.

* மருத்துவர் ராமதாஸ் நினைத்தால், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தாமலேயே தமிழ்நாடு அரசைப் பணிய வைக்க முடியும். * தகுந்த வாதங்களை முன்வைத்தால் நீதிமன்றத் தீர்ப்பையும் சட்டப்படி முறியடிக்க வாய்ப்பு இருக்கிறது. * ஆனால், அவர் சமூகநீதிக் காவலர் அல்ல ஒரு சாதிக்கான தலைவர் என்ற கூற்று மேலும் உறுதிப்படும். * எனவே, எப்படிப் பார்த்தாலும் இது பாமகவுக்கு ஒரு சவாலான தருணம்தான்!

நன்றி : **இந்து தமிழ் நாளிதழ் (காமதேனு)**


**மறுமணம் மணமகள் தேவை**

நட்சத்திரம் : ரேவதி
ராசி : மீனம்
பிறந்த தேதி : 06.05.1983 நேரம் :
தந்தை பெயர் : முனுசாமி (லேட்)
தொலைபேசி : 7094767406
இடம் : இராணிபேட்டை

**M. சக்திவேல்**
(Diploma) Railway (Cont)

# S.F.R.BC அரசின் உள்ஒதுக்கீடு விழிப்புணர்வு கருத்தரங்கம்












கோவை எஸ்.என்.ஆர்., கலையரங்கில், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் உரிமைக்கான கூட்டமைப்பின் நிறுவனர் ரத்தின சபாபதி பேசினார். கருத்தரங்கில் பங்கேற்றவர்களில் ஒரு பகுதியினர். பிற்படுத்தப்பட்டோர் உரிமைக்காக தொடர் போராட்டம் நடத்த உறுதி கோவை, நவ.29.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரின் உரிமைகளை மீட்டெடுக்க, சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ந்து போராடுவது என,பிற்பட்ட சமுதாய உரிமைக்கான கூட்டமைப்பு சார்பில் தீர்மானிக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் கூட்டமைப்பு சார்பில், இடஒதுக்கீடு மற்றும் சமுதாயப் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு, கோவை, எஸ்.என்.ஆர். கலையரங்கில் நடந்தது. அமைப்பின் நிறுவனர் ரத்தினசபாபதி தலைமை வகித்தார்.

சட்ட நிபுணர் சித்தன்னன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார். கருத்தரங்கில், '1989 முதல் அம்பாசங்கர் கமிஷனின் தவறான ஒருதலைப்பட்சமான அறிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட இட ஒதுக்கீடு, 30 ஆண்டுகளாக,பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு ஒரு குறிப்பிட்ட சாதியினரை மட்டும் தலைவராக நியமித்தது, 255 சமுதாயத்தினரை உள்ளடக்கிய பிற்படுத்தப்பட்டோர் உரிமைக்கான கூட்டமைப்பை ஆலோசிக்காமல் வன்னிய சமூகத்திற்கு சட்ட விரோத இட ஒதுக்கீடை வழங்கியது, ஜாதிவாரிக் கணக்கெடுப்பை எடுக்காமல் புறக்கணிப்பது, பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கான (ஈடபிள்யூ.எஸ்) இட ஒதுக்கீட்டை ஒருதலைப்பட்சமாக 10 சதவீதம் வழங்கியது' ஆகிய கருத்துகளின் அடிப்படையில் விவாதிக்கப்பட்டது.

தொடர்ந்து, மத்திய, மாநில அரசுகள் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு விரோதமாக செயல்படுவதால் ஏற்படும் இழப்புகள் குறித்து, கிராமந்தோறும், நகரம்தோறும் விழிப்புணர்வு இயக்கம் நடத்துவது, சுப்ரீம் கோர்ட்டில் உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்து போராடுவது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

பிற்படுத்தப்பட்ட 16 சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள், கூட்டமைப்பு துணைத்தலைவர் வெள்ளியங்கிரி, விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிர்வாகி சதீஷ்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

யாதவர் பேரவை பிரதிநிதியாக உயர்மட்டக் குழு தலைவர் திரு. எஸ். வேலுசாமி யாதவ் உரையாற்றினார். யாதவர் மாணவ, மாணவியரின், இளையோரின் எழுர்ச்சிக்குரலாக மெய்ஸ்ரீ சிறப்புரையாற்றினார்.

## கோபுர தரிசனச் சிறப்பு

வழிபாட்டு ஸ்தலங்களின் கோபுரம், டவர் உயரமாக இருப்ப தற்கு காரணம் உண்டு. ஊர் மக்கள் பார்வையில் அது படும் போதெல்லாம் உள்ளத்தில் தெய்வீக உணர்வை ஊட்ட வேண்டும் என்பதற்காகவே கோபுரம் உயர்ந்து நிற்கிறது. 'கோபுர தரிசனம்' கோடி புண்ணியமாகும். மனிதன் மனவாசலின் வழியே இறைவனை நாடி,உள் முகமாக போக வேண்டும் என்பதை உணர்த்துவதே கோபுர வாயில். வழிபாட்டு ஆலயங்களின் பலிபீடம் அவரவர் இதயத்தை அழுக்காக்கும் கீழான எண்ணங்களை அங்கே நின்று பலியிட வேண்டும். மேன்மை தரும் மேலான நினைவுகளுடன், வழிபாட்டு ஸ்தலங்களில் வலம் வர வேண்டும். மனதின் அதிர்வலைகளுக்கேற்ப சுவாசம் மாறுபடும். ஆலயங்களுக்கு சென்று மேலான நினைவுகளுடன் தியானித்தால் பிராணயாமம் நெறிபடுத்தப்படும்.



# யாதவர்கோன்
# கொங்கு நாட்டு கோனார் கல்வெட்டு
# கோனார் – இடையர் (வெள்ளலூர் கல்வெட்டு)

கொங்கு நாட்டில் பண்டைக்காலத்தில் கால் நடை வளர்ப்பே மேலோங்கியிருந்தது. ஆகெழு கொங்கு என்பது சங்க இலக்கியம் ஒன்றில் பயில்கின்ற தொடர். மலைப்பகுதியிலும், சமவெளியிலும் கால் நடைகளை மேய்த்து வளர்த்தனர். கொங்குப்பகுதியில் வழங்கும் பட்டி, தொழு ஆகிய சொற்கள் கால் நடை வளர்ப்பை ஒட்டி எழுந்தவையாகும். சோழர்களின் ஆட்சி கொங்குச்சோழர்களின் மூலம் நடைபெறத்தொடங்கியது முதலே வேளாண்மை முதன்மை பெற்றது. இருப்பினும், கால் நடை வளர்ப்பு என்பது கொங்கு மக்களின் பிரிக்கமுடியா அங்கம். கால்நடை வளர்ப்புக்குப் பொறுப்பேற்றவர்கள் இடையர்கள். யாதவர் என வழங்கப்பட்டவர்களும் இவரே. கல்வெட்டுகளில் இவர்கள் கோன், கோனார் எனக் குறிக்கப்படுகிறார்கள்.

கோவில்களில், நந்தா விளக்கு எரிக்கவும், அமுதுபடி (நைவேத்தியம்) மற்றும் வழிபாட்டு நிகழ்வுகளுக்காகவும் தேவைப்படும் நெய் இந்த இடையர்களிடமிருந்தே பெறப்பட்டது. இது கல்வெட்டுகள் சொல்லும் செய்தி. சந்தியா தீபம் என்னும் கோவில் விளக்கு ஒன்றுக்குத் தொண்ணூறு ஆடுகள் என்ற கணக்கில் நிவந்தம் அளிக்கப்பட்டது. இதிலிருந்து, கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் இடையர்களின் செல்வாக்கு ஆகியவை பற்றி உணர்ந்துகொள்ளலாம். அத்தகு இடையர்களில் ஒருவர் கோவிலுக்குக் கொடை அளித்த செய்தியைக் கொண்டிருக்கும் கல்வெட்டு ஒன்று கோவை வெள்ளலூரில் இருக்கும் தேனீசுவரர் கோவிலில் கண்டறியப்பட்டுள்ளது.

கோவில் வளாகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு, கரு நிறக்கல்லைக்கொண்டு அமைக்கப் பட்டுள்ளது. செவ்வக வடிவிலான இதன் உச்சிப்பகுதி மட்டும் ஒரு மைல் கல்லின் வளைவோடு காணப்படுகிறது. இப்பகுதியில், நடுவில் ஒரு நந்தியும், நந்திக்கு மேற்பகுதியில் திரிசூலம் ஒன்றும் புடைப்புருவமாகச் செதுக்கப்பட்டுள்ளன. நந்திக்கு இடப்புறமும் வலப்புறமும் சூரிய, சந்திரர்களின் புடைப்புருவங்கள். சூரிய, சந்திரர்கள் உள்ளவரையிலும் கோவிலுக்குச் செய்த தன்மம் (கொடை) தடையின்றி நடக்கவேண்டும் என்பதன் குறியீடாகவே சூரிய,சந்திரர் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் கீழே பட்டையாக ஒரு புடைப்புச் செதுக்கம். இதன் கீழே பதினேழு வரிகளில் கல்வெட்டு. கல்வெட்டு பிள்ளையார் சுழியுடன் தொடங்குகிறது.(முதல் வரி). இரண்டாம் வரியில் சிவமயம் என்று உள்ளது.

வெள்ளலூர் மஜார் இடையர்பாளையத்தைச் சேர்ந்த குமரக்கோனான் என்பவரின் மனைவியான (கல்வெட்டு பெண்ஜாதி எனக்கூறுகிறது) மருதக்காள் என்பவர் விசுவநாதர், விசாலாட்சி ஆகிய கடவுளர்களின் சன்னிதிகளை அமைத்து, அறுபத்துமூன்று நாயன்மார் சிலைகளை எழுந்தருளச்செய்து (பிரதிஷ்டை செய்து), நாயன்மாருக்கென மண்டபமும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

அதுமட்டுமன்றி, வெள்ளலூர், சிங்கனூர் (தற்போதைய சிங்கநல்லூர் கல்வெட்டில் சிங்கனூர் எனக் குறிப்பிடப்படுகிறது), மற்றும் செட்டிபாளையம் ஆகிய ஊர்களில் இவருக்குப் பாகமாக வந்த நிலங்களையும் கோவிலுக்கே கொடையாக அளித்துள்ளார்.

இந்த நிலங்களின் மதிப்பு, கொடை வழங்கிய காலத்தில் ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு பெறுமானம் உடையதாக இருந்தது. கல்வெட்டின் காலம் கல்வெட்டின் தொடக்கத்திலேயே குறிக்கப்பட்டுள்ளது. அக்கால வழக்கப்படி கலியுக ஆண்டும், சாலிவாகன ஆண்டும் (சக ஆண்டே சாலிவாகன ஆண்டென்றும் வழங்கப் பெறும்) குறிக்கப்படுகின்றன. ஆங்கில ஆண்டான கிறித்து பிறப்புக்கு 3101 ஆண்டுகளுக்கு முன்பே கலியுக

ஆண்டுப் பிறப்பு அமைந்துள்ளதால், கல்வெட்டு குறிப்பிடும் கலியுக ஆண்டான 5022-இலிருந்து 3101-ஐக் கழிக்கக் கிடைப்பது கி.பி. 1921 . அதேபோல், சக ஆண்டு, கி.பி. 78-ஆம் ஆண்டிலிருந்து தொடங்குவதால், கல்வெட்டு குறிப்பிடும் சக ஆண்டான 1843-உடன் 78-ஐக் கூட்டக் கிடைப்பது கி.பி. 1921. கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் கலியாண்டும், சகவாண்டும் கி.பி. ஆண்டோடு சரியாகப் பொருந்துகிறது. கல்வெட்டில் குறிக்கப்படும் தமிழ் ஆண்டான துன்மதி ஆண்டும் கி.பி. 1921-ஆம் ஆண்டுடன் பொருந்திவருகிறது. சரியாக 11.7.1921 திங்கள் கிழமையன்று இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. காலத்தைத் தெளிவாகக் காட்டும் வகையில் பழைய கல்வெட்டுகளிலும், பத்திரங்களிலும் கலியாண்டும், சகவாண்டும், தமிழ் (அறுபது ஆண்டுகள் கொண்ட வட்டம்) ஆண்டும் குறிக்கப்படுவதைப் பார்க்கிறோம். மேலும் ஆனி மாதம் 28-ஆம் நாள், சோமவாரம், சிம்ம லக்கினம், அஸ்த நட்சத்திரம் ஆகிய கோள் நிலைக்கிறிப்புகளும் கல்வெட்டில் உள்ளன. அஸ்த நட்சத்திரம் என்னும் குறிப்பு, கல்வெட்டு எழுத்துகளைப் பொறிக்கும்போது விடுபட்டுப்பொனதால், ஐந்தாம் வரிக்கும் ஆறாம் வரிக்கும் இடையில் செருகலாகப் பொறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

## கல்வெட்டின் பாடம்:

1. உ
2. சிவமயம்
3. சாலியவாகன சகாப்தம் - 1843 - கலியு
4. காதி 5022 - துன்மதி வரு - ஆனி மீ
5. 28 தேதி சோமவாரம் சிம்மலக் ந.அஸ்தம்
6. கினம் வெள்ளலூர் மஜார் இடைய
7. பாளையம் குமரக்கோனான்
8. பெண்ஜாதி மருதக்காள் வி
9. ஸ்வநாத விஸாலாக்ஷி அம்மன்
10. அறுபத்திமூவர் நாயன்மார்க
11. ளுடன் மண்டபமும் நூதன
12. பிரதிஷ்டை உபயம்
13. வெள்ளலூர்-சிங்கனூர்
14. செட்டிபாளையம் இந்த
15. மூன்று ஊரில் மருதக்கா
16. ளுக்கு பாகம் வந்த பூமி
17. 2500 ரூ பொரும் பூமி உபயம்



மேற்படி கல்வெட்டின் காலத்தில், வெள்ளலூர், செட்டிபாளையம், சிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் கோனார் என்னும் இடையர்கள் மிகுதியும் இருந்தமையும், இக்குலத்தவரில் பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தமையும், பெண்கள் தம் விருப்பத்துடன் தம் சொத்துக்களை அறச்செயல்களுக்குப் பயன்படுத்தியமையும் கல்வெட்டுச் செய்தியின் வாயிலாக அறிகிறோம். மருதக்காள் போலக் கொடையுள்ளம் கொண்ட செல்வர்கள், தற்போது சிதைவு கண்டு வரும் கோவில்களுக்குத் திருப்பணிகள் செய்தால், பழங்கோவில்கள் பல புத்துயிர் பெறும்.



# தலைமை நிலைய செயலாளர் செய்தி

## தலைமை நிர்வாக செலவு கணக்குகள்

**November to December 2021**

**Mr. K.Kothandaraman Yadav, Cell : 94440 50110**

| S.No. | Expenses Head of Accounts | Amount |
|---|---|---|
| 1. | Magazine | 16,758 |
| 2. | Stationery | 445 |
| 3. | Meeting | 160 |
| 4. | Salary | 13,000 |
| 5. | Courier | 82 |
| 6. | EB | 1,380 |
| | **TOTAL** | **31,825** |

| S. No. | Name & Address | Receipt Book No. | Receipt Voucher No. | Amount | Date | Payment |
|---|---|---|---|---|---|---|
| 1. | Mr.R.Ravichandran Yadav | 94 | 4673 | 660 | 17.11.2021 | HM |
| 2. | Mr. Yogeshkumar Yadav | 94 | 4674 | 10,000 | 20.11.2021 | DF |
| 3. | Mr.Rajesh Kannan Yadav | 94 | 4675 | 25,000 | 20.11.2021 | DF |
| 4. | Mr.K.Ramamoorthy Yadav | 03 | 228 | 150 | 16.11.2021 | OYM |
| 5. | Mr.S.Mahalakshmi Yadav | 03 | 229 | 150 | 18.11.2021 | OYM |
| 6. | Mr.T.Sukumar Yadav | 03 | 230 | 150 | 24.11.2021 | OYM |
| 7. | Mr.B.Krishnakanth Yadav | 03 | 231 | 150 | 24.11.2021 | OYM |
| 8. | Mr.T.Sugumar Yadav | 41 | 4043 | 110 | 23.11.2021 | LM |
| 9. | Mr. T. Sugumar Yadav | 03 | 232 | 150 | 24.11.2021 | OYM |

OYM - Ollikum Yadavar Murasu
HM - Hereditary Member
M - Life Member
DF - Delevopment Fund

# மகாபாரதத்தில் கண்ணன் அழுத இடம்.

உடல் அழியக் கூடியது. ஆத்மா அழியாது என்று அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்த கண்ணன் அழுத இடம் ஒன்று உண்டு. அஃது எந்த இடம் தெரியுமா?

கர்ணன் அடிபட்டு இறக்கும் தருவாயில் இருக்கிறான். *அவன் செய்த தர்மம்* *அவனைக் காத்து நின்றது. அந்த தர்மத்தையும் கண்ணன் தானமாகப் பெற்றுக் கொண்டான்* . *கண்ணனுக்கே* தாங்கவில்லை. உனக்கு ஒரு வரம் தர விரும்புகிறேன். என்ன வரம் வேண்டுமோ கேள்''* என்றான்.

அப்போதும் *கர்ணன் ''மறு பிறவி* என்று ஒன்று வேண்டாம். அப்படி *ஒரு வேளை பிறக்க நேர்ந்தால்,* *யாருக்கும் இல்லை என்று சொல்லாமல் கொடுக்கும் உள்ளத்தைத் தா''* என்று வேண்டினான். *கண்ணன் அழுதே விட்டான்.*

இப்படி *ஒரு நல்லவனா* என்று அவனால் தாங்க முடியவில்லை. *கீழே விழுந்து கிடந்த கர்ணனை அப்படியே எடுத்து மார்போடு அனைத்துக் கொண்டான்.* *கண்ணனின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அந்தக் கண்ணீரால் கர்ணனை நீராட்டினான்.* *கர்ணன் கேட்டதோ இல்லை என்று சொல்லாத உள்ளம் மட்டும் தான்* .

*கண்ணன்* மேலும் பலவற்றை சேர்த்துத் தருகிறான் *''நீ எத்தனை பிறவி எடுத்தாலும், தானம் செய்து, அதைச் செய்ய நிறைய செல்வமும் பெற்று, முடிவில் முக்தியும் அடைவாய் ''* என்று *வரம்* தந்தான். *இறைவனைக்* காண வேண்டும், *முக்தி* அடைய வேண்டும் என்று எவ்வளவோ பேர் எவ்வளவோ தவம் செய்வார்கள்.

எவ்வளவோ படிப்பார்கள். *கர்ணன் இறைவனைக்* காண வேண்டும் என்று *தவம் செய்யவில்லை. முக்தி வேண்டும் என்று மெனக்கெட வில்லை* . *இறைவன்* அவனைத் *தேடி வந்தான்.* கேட்காதபோதே *விஸ்வரூப தரிசனம்* தந்தான். அவனைக் *கட்டி அணைத்துக்* கொண்டான். *கண்ணீர்* விட்டான். *செல்வம், ஈகை, முக்தி* என்று எல்லாம் கொடுத்தான். *இறைவனைத் தேட வேண்டாம். அவன் நாம் இருக்கும் இடம் தேடி வருவான். கேட்காதது எல்லாம் தருவான். நம்மைக் கட்டி அனைத்துக் கொள்வான்.* அதற்கு என்ன செய்ய வேண்டும்?

*கர்ணன் தானம் செய்தான், செய் நன்றி மறவாமல் இருந்தான்* . *எளியவர்களுக்கு உதவி செய்தான், தனக்கு உதவி செய்தவர்களுக்கு நன்றி மறக்காமல் இருந்தான். அவ்வளவுதான்.* *உலகளந்த பெருமாள்,* அவனிடம் *கை நீட்டி நின்றார்.* *ஈகை* எவ்வளவு பெரிய நற்செயல் !

*இயன்றதை செய்வோம்*
*இல்லாதவர்க்கு*


## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| நட்சத்திரம் | : | ஆயில்யம் 3ம் பாதம் |
| ராசி | : | கடகம் |
| பிறந்த தேதி | : | 30.04.1993 நேரம் : 8.49 am |
| தந்தை பெயர் | : | J.ஸ்ரீதரன் |
| தொலைபேசி | : | 9791556328 /9176382244 |
| இடம் | : | மேடவாக்கம் / வடக்குப்பட்டு |

**S. சச்சின்** B.tect., IBT., M.S.,
Senior Research Associate
@ Bangalore

# அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?

இந்த பழமொழியின் உண்மையான அர்த்தம் பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை. அதனைப் பற்றி விரிவாக காணலாம்:'' ''தவறாக நீங்கள் நினைப்பது:'' ''பெண்கள் படிக்க போக கூடாது, பெண்கள் வீட்டு வேலைகளை மட்டுமே செய்யனும், உதாரணமாக அடுப்படியில் வேலை மட்டுமே செய்யனும்.'' ''இப்படி தானே நீங்கள் நினைத்து இருப்பீங்க?''

''இது தவறாக பரப்பட்ட வதந்தி அவ்வளவு தான்'' ''பழமொழியின் உண்மையான அர்த்தம்:'' ''அந்த காலத்தில் பெண்கள் தலையில் ஒரு படி அளவு கொண்ட பூவை சூடுவது வழக்கமான ஒன்றாக இருந்தது'' ''குமரி பெண்கள் தலையில் ஒரு படி பூவை வைத்துக் கொண்டு சமையல் வேலை செய்யும் பழக்கம் இருந்தது''

''இப்போது போல அந்த காலத்தில் கேஸ் ஸ்டவ் எல்லாம் கிடையாது'' ''அனைவருமே விறகு அடுப்பில் தான் சமையல் செய்தாகனும்'' ''விறகு அடுப்பை அப்ப அப்ப ஊதுகுழல் கொண்டு ஊதும் வழக்கம் உள்ளது''

''அந்த காலகட்டத்தில் வீட்டில் உள்ள பெரிய வயதான பாட்டிகள் வீட்டில் உள்ள இளம் குமரிகளை பார்த்து நீ அடுப்பு ஊதுற அந்த நேரத்தில் ஒரு படி பூவை தலையில் வைத்துக் கொண்டு அடுப்பை ஊதினால் அடுப்பின் அனலுக்கு தலையில் வைத்த ஒரு படி பூவும் கருகி போகும்'' ''ஆகவே சமையல் முடித்து குளித்து பூவை சூடுங்கள் என்று அறிவுரை சொல்லுவாங்க'' ''அப்படி கூறும் அறிவுரை தான் ''அடுப்பூதும் பெண்ணுக்கு படி பூ எதற்கு? என்று சொல்வது வழக்கம்''

''அடுப்பை ஊதுர பெண்ணுக்கு படி பூ எதற்கு என்பதை தான் மருவி படிப்பு எதற்கு என்று கேட்டதாகவும் இப்ப நாங்க படிக்க போறோம் என்றும் பல பெண்கள் பெருமையாக நினைப்பது உண்டு'' ''ஆனால் அந்த காலத்தில் படி பூவை பற்றி தான் சொன்னாங்க அதை நம்ம ஆளுங்க படிப்பாக மாத்திட்டாங்க அவ்வளவு தான்''

**படித்ததை பகிர்வது,**

## கண்ணீர் அஞ்சலி

திரு.**ஏ.சம்பத்**

தொட்டிப்பாளையம்,

அவர்கள் 23.11.2021 அன்று இயற்கை எய்தினார்.



அவர் குடும்பத்தார்க்கு யாதவர் பேரவை, YP நல அறக்கட்டளை சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

# முத்தமிழ் வளர்க்கும் மணிமொழி

பேச்சு, நடிப்பு, கரகாட்டக் கலை, திரைப்படப் பாடல்கள் எழுதுவது, ஓவியம் வரைவது, தடகள விளையாட்டு என்று பல துறையிலும் தடம்பதித்து வருகிறார். மணிமொழி கன்னியப்பன்.

இவர் ராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் அருகேயுள்ள சிறிய தென்னல் கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை கன்னியப்பன் யாதவ் முன்னணி தொலைக்காட்சியில் ஒளிப்பதிவு அரங்க உதவியாளாராகப் பணி செய்கிறார். தாய் விசாலாட்சி குடும்பத் தலைவி, மணிமொழிக்கு இரண்டு சகோதரர்கள்.

16 வயதான மணிமொழி அரசுப் பள்ளியில் 12-ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் தமிழ் மொழி மீது அதிக பற்று கொண்டவர். இளைய சமுதாயத்திடம் தமிழை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

அவரது பேட்டி,

**தமிழ் மொழி மீது பற்று ஏற்பட்டது எப்படி?**

சிறுவயதில் இருந்தே இயல்பாகவே எனக்கு தமிழ் மொழி மீது ஆர்வம் இருந்தது. ஐந்தாம் வகுப்புப் படிக்கும்போதே நூறு திருமந்திரங்களைச் சொல்லி பரிசு வாங்கினேன். ஆறாம் வகுப்பு படிக்கும்போது பள்ளி நாடகத்தில் நடிக்கச் சொன்னார்கள். என் நடிப்பைப் பார்த்து, ஆசிரியர்கள் வெகுவாகப் பாராட்டி, மற்ற மாணவர்களுக்கும் பயிற்சியளிக்கச் சொன்னார்கள். ஜாஸ்மின் என்ற ஆசிரியைதான் தமிழ் வசனங்களை ஏற்ற இறக்கத்துடன் பேசுவது எப்படி? என எனக்கு சொல்லிக்கொடுத்தார். அதைப் பின்பற்றி ஏராளமான பேச்சுப் போட்டிகளிலும், தனி நடிப்புப் போட்டிகளிலும் பங்கேற்று நிறைய பரிசுகள் பெற்றேன். நவரசத்தையும் நடிப்பில் பழகினேன். ஏழாவது படிக்கும்போது கவிதை எழுதத் தொடங்கினேன். பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழில் 96 மதிப்பெண்களைப் பெற்றேன்.

**கரகாட்டக் கலையை எப்படி கற்றீர்கள்? அதில் நீங்கள் செய்துள்ள சாதனைகள் என்ன?**

ஆறாம் வகுப்பு படித்தபோது சென்னையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தின் காரணமாக எங்கள் வீட்டை தண்ணீர் சூழ்ந்தது. எனது ஆசிரியர் ஹேமலதா, என்னை அவரது வீட்டில் தங்க வைத்தார். அப்போது மின்சாரம் தடைப்பட்டு எதுவுமே செய்ய முடியாத சூழலில் இருந்தபோது, அவர் எனக்கு கரகாட்டம் ஆடக் கற்றுக் கொடுத்தார். அவர் மூலமாக அடிப்படை விஷயங்களை முழுவதையும் கற்றுக்கொண்ட நான்,எனது ஆர்வத்தினால் தீவிரமான பயிற்சி செய்து அதை மேம்படுத்திக் கொண்டேன். அதன்பிறகு தனியார் தொலைக்காட்சியில் நடந்த நிகழ்ச்சியில் கரகம் ஆடினேன். பானை மீது நின்று ஆடுவது. கரகம் கீழே விழாமல் கல், கைக்குட்டை போன்றவற்றை வாயால் எடுப்பது போன்றவற்றை ஒளிபரப்பினார்கள்.

**நீங்கள் பாடலாசிரியர் ஆனது எப்படி?**

ஏழாம் வகுப்பு முதலே கவிதை எழுதத் தொடங்கிய நான், எட்டாம் வகுப்பு படித்தபோது அம்மாவைப் பற்றி ஒரு பாடல் எழுதினேன். ஒன்பதாம் வகுப்பு படித்தபோது, தனியார் தொலைக்காட்சியின் இசை நிகழ்ச்சியில் கலக்கிய சிறப்புக் குழந்தை தேஜுவின் அபார குரல் வளத்தையும், ஆர்வத்தையும் பாராட்டி பாடலாக எழுதினேன். அந்தப் பாடலை, அந்த நிகழ்ச்சியின் நடுவர்கள் இசையமைப்பாளர் ஷங்கர் மகாதேவன் இசையமைத்து, அவருடன் சேர்ந்து பாடகர்கள் சித்ரா, எஸ்.பி.பி. சரண் கல்பனா, தேஜு ஆகியோரும் பாடி ஒளிப்பதிவு செய்தார்கள். அதை அதே நிகழ்ச்சியில் வெளியிட்டதோடு என்னையும், எனது தந்தையையும் நேரில் அழைத்து கவுரவித்தார்கள்.

அதன் பிறகு 'புதிய தீர்ப்பு' என்ற படத்தில் பாடல் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. விரைவில் வெளிவரவுள்ள அந்தப் படத்தில் ஒரு காதல் பாடலை எழுதியிருக்கிறேன். அடுத்து இன்னொரு படத்துக்கும் பாடல் எழுதப் போகிறேன்.

## உங்களிடம் இருக்கும் மற்ற திறமைகள் பற்றி கூறுங்கள்?

ஓவியம் வரைவது, தடகள விளையாட்டு ஆகியவற்றிலும் எனக்கு ஆர்வம் உண்டு. மாவட்ட அளவிலும், மண்டல அளவிலும் போட்டிகளில் பங்கேற்று நிறைய பரிசுகளை வாங்கியிருக்கிறேன். ஆயில் பெயிண்டிங், பென்சில் டிராயிங் போன்றவற்றை சிறப்பாகச் செய்வேன், ஒருவரின் உருவத்தையோ அல்லது புகைப் படத்தையோ அப்படியே பிரதியெடுப்பது போல் என்னால் வரைய முடியும். நன்றாகப் பாடுவேன், குறிப்பாக பக்திப் பாடல்களை விரும்பிப் பாடுவேன். யூடியூப் சேனல் ஒன்றையும் நடத்தி வருகிறேன்.

## உங்களுக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் பற்றி?

தமிழ் மொழி மீதான எனது ஆர்வத்தைக் கண்டு எனது பள்ளியின் 'தமிழ்ச் சங்கத் தலைவர்' பொறுப்பை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், மாநில அளவில் 15 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்ற பேச்சுப் போட்டியில், முதல் பரிசை வென்றதால் கண்ணதாசன் அறக்கட்டளையின் சார்பில் அவரது நினைவு நாளில் 'கண்ணதாசன் விருது' வழங்கி கவுரவித்தார்கள்.

## உங்கள் லட்சியம் என்ன?

இயல், இசை, நாடகம் மூலமாக தமிழ்த்தொண்டு ஆற்றுவதே என் வாழ்நாள் லட்சியம். உயர்தனிச் செம்மொழியான தமிழ் மொழியின் அருமை இளைய தலைமுறைக்குத் தெரியவில்லை என்பது எனது ஆதங்கம். என் பேச்சு, கவிதை, பாடல் போன்றவற்றின் மூலம் தமிழை அவர்களிடம் கொண்டு சேர்க்கப் விரும்புகிறேன்.

தமிழ் ஆசிரியராகி, மாணவர்கள் நேசிக்கும் வகையில் தமிழைப் போதிக்க விரும்புகிறேன். திரைப்படங்களிலும் அதிக பாடல்களை எழுத வேண்டும் என்று விரும்புகிறேன். ஆதி தமிழர்களின் பாரம்பரியக் கலையான கரகாட்டக் கலையை, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிற குறிக்கோளுடன் பல மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்து வருகிறேன். இவர் இன்னும் மென்மேலும் வளர யாதவர் பேரவை மற்றும் YP நல அறக்கட்டளை சார்பாக வாழ்த்துகிறோம்.


முத்தமிழ் வளர்க்கும் மணிமொழி



# தமிழக மேய்ச்சல் சமூகத்தினர் குரல்,
## இந்திய மேய்ச்சல் சமூகத்தினரோடு இணைந்து ஒலிக்கும்!

தொழுவம் மேற்கொள்ளும் ஆய்வான மேய்ச்சலில் ஈடுபவர்களின் வாழ்வியல் குறித்த தகவலை அறிந்த நிறுவனம் (https://centreforpastoralism.org/) நியூ டெல்லி, புஜ் குஜராத், உத்தரகாண்ட் ஆகிய பகுதிகளை சேர்ந்த ஆய்வாளர்கள் நேற்றும், இன்றும் தொழுவம் ஆய்வு மையம் மற்றும் பல்வேறு கிடைகளை கள ஆய்வு மேற்கொண்டனர். இங்குள்ள கிடை மாடு, கிடை ஆடு வளர்ப்பு முறைகளை ஆர்வமுடன் பார்த்தனர், இதன் கழிவுகளில் இருந்து மதிப்பு கூட்டு பொருட்கள் தயாரிப்பதை பார்வையிட்டனர்.

மேய்ச்சலில் ஈடுபடுவர்கள் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளை இந்திய முழுவதும் மேய்ச்சலில் ஈடுபடும் அமைப்புகளோடு இணைந்து குரல் எழுப்பவும், பல்வேறு மாநிலங்களில் அனுமதி வழங்கியுள்ள வன உரிமை சட்டம் மூலம், நாமும் மீட்க வாய்ப்பு கிடைத்துள்ளது.

தொழுவம் - தொடரும் ஆவினப் பொருளாதாரம்!






## நன்றி பாராட்டி, வணங்கி மகிழ்கிறோம்!

தொ.பரமசிவன் அய்யா அவர்களின் நூல்கள், தமிழக அரசால் நாட்டுடமையாக்கப்பட்டதை நாம் வரவேற்று, வணங்கி மகிழ்ந்தோம்!

அதைத்தொடர்ந்து, இன்று, தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், நமது அன்பிற்கும் மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரிய, தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் மற்றும் செயலர்கள் முன்னிலையில், நூலுரிமைத் தொகையினை, தொ.ப. அய்யாவின் குடும்பத்தினர்க்கு வழங்கிச் சிறப்பித்தமையைப் பாராட்டி,வணங்கி மகிழ்கி றோம்!–



இவண்,

தொ.ப.கூடல் குழு, மதுரை.

# தமிழ்ப் புத்தாண்டு

“தமிழர் புத்தாண்டு தை முதல் நாளா? அல்லது சித்திரையா?” என்ற விவாதம் தொடர்ந்து வருகிறது. அதற்கான இலக்கிய மற்றும் அறிவியல் ஆய்வு பார்வையை முன் வைக்கிறோம்...முதலில் தமிழர்களிடம் ஆண்டு என்றொரு காலக்கணிப்பு முறை இருந்ததா? எனப் பார்ப்போம். யாண்டு என்ற பழந்தமிழ்ச் சொல்லே மருவி ஆண்டு என வழங்கலாயிற்று. யாண்டு என்ற சொல்லானது தொல்காப்பியத்தின் முதற்பொருளான நிலம், பொழுது ஆகிய இரண்டையும் குறிக்கும்.

யாண்டு என்ற சொல் இடம்பெற்ற சில பாடல்களைப் பார்ப்போம்.“வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு “யாண்டும் இடும்பை இல.” (குறள் 4) இப்போது காலத்தைத் தெளிவாகக் குறிக்கும் யாண்டு என்ற சொல் இடம்பெற்ற சங்ககாலப் பாடலைப் பார்ப்போம்.“பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன நீர் உறை மகன்றிற் புணர்ச்சி போலப்” (குறு:57:1) “இப் பாடலில் யாண்டு கழிந்தன்ன“என்பது அக்காலம் பல யாண்டுகள் கடந்தாற் போன்ற என்ற பொருளில் இடம்பெறுகின்றது.

இந்த ஆண்டு தற்போதைய நாட்காட்டி ஆண்டு போன்றது என நான் கூறவரவில்லை, ஏனெனில் தற்போதைய நாட்காட்டி ஆண்டு (Gregorian calendar) நடைமுறைக்கு வந்தது சில நூற்றாண்டுகளிற்கு முன்பு-தான். ஏதோ ஒரு வகையான காலப்பகுதியினை யாண்டு எனச் சங்க காலத் தமிழர்கள் அழைத்துள்ளனர் என்பதுதான் இங்கு தெளிவாகின்றது. எனவே தமிழர்களிற்கு என ஒரு ஆண்டுக் கணிப்பு இருந்திருந்திருப்பின், அந்த ஆண்டிற்கு ஒரு தொடக்கமும் இருந்திருக்கும்.யாண்டின் தொடக்கமாக தை மாதமே இருந்துள்ளது என்பதற்கு நேரடித் தரவுகள் சங்ககாலப் பாடல்களில் காண முடியவில்லை என்றபோதும், அதற்கான இரு சான்றுகளை உய்த்துணரலாம்.

**முதலாவதாக :** தை மாதமளவிற்கு வேறு எந்தவொரு மாதமும் சங்ககாலப் பாடல்களில் சிறப்புப்படுத்தப் படவில்லை. (தை மாதச் சிறப்பின் 10 அளவிற்கு கூட வேறு எந்த மாதமும் சிறப்புப் பெறவில்லை). தைத்திங்கள் தண்கயம் படியும் (நற்றிணை 80) , தைஇத் திங்கள் தண்ணிய தரினும் (குறுந்தொகை 196) என்பன உட்படப் பல சங்க காலப் பாடல்கள் தையினைச் சிறப்பித்துக் கூறுகின்றன.

**இரண்டாவதாக :** தை என்ற சொல்லிற்குச் சேர்த்தல் என்ற பொருளும் உண்டு (இரண்டு துணிகளை இணைத்து தைத்தல்). இங்கு தை என்பது இரண்டு யாண்டுகளை (காலப்பகுதிகளை) இணைக்கின்றது. இவ்விரு காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டே தை மாதமே ஆண்டின் தொடக்கமாக விருந்திருக்கும் என உய்த்தறியலாம்.

இதனைவிட, தை மாதமே ஆண்டின் தொடக்கமாகக் கொள்ள இயற்கைசார்ந்த இரு காரணங்களும் உண்டு. அவையாவன வருமாறு. அறுவடைக்காலம் : செல்வ வளம் பொருந்திய காலமே புத்தாண்டாகக் கொண்டாடப் பொருத்தமாகவிருந்திருக்க முடியும். (இன்று பலர் உழவுத்தொழிலில் தங்கியிராத நிலையில், இதன் எச்சமாகவே பொங்கல் மிகைப்பணம் (Bouns) அரசால் வழங்கப்படுகின்றது. அன்று அந்த வாய்ப்பு இல்லாமையால், அறுவடைக்காலமே பொருத்தமானதாகும்).

**காலநிலை :** தை மாதத்தின் தண்மை (குளிர்மை) பல பாடல்களில் குறிப்பிடப்படுகின்றது. இவ் வாறான ஒரு மகிழ்ச்சியான காலப்பகுதியே ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளப் பொருத்தமானதாகும். (மாறாக தாயகத்தில் சித்திரையில் கொளுத்தும் வெயிலே சுட்டெரிக்கும் காலப்பகுதி பொருத்தமான-தாகக் காணப்படமாட்டாது.) மேலும் எளிய மக்களின் வழக்காற்று மொழிகளிலும் கூட பழைய வரலாற்று எச்சங்களைக் காணலாம். அந்த வகையில், தை பிறந்தால் வழி பிறக்கும், தீய்ந்த தீபாவளி வந்தாலென்ன? காய்ந்த கார்த்திகை வந்தாலென்ன? மகா ராசன் பொங்கல் வரவேண்டும் என்பன போன்ற சொல்ல-டைகளும் தை மாதத்தின் முதன்மையினைக் காட்டுகின்றன. அண்மையில் இராமநாதபுரம் கீழக்கரையில்

கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றும் சில நூற்றாண்டுகளிற்கு முன்னர்வரைத் தையே புத்தாண்டாகக் கருதப்பட்டதனைக் காட்டுகின்றது. வரலாற்று தொல்லியல் ஆய்வாளர் விஜயராமு 300 ஆண்டுகளுக்கு முன்பு வரை தை மாதமே தமிழ் ஆண்டின் முதல் மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கலாம் என்பதற்குச் சான்றாக இந்த பழங்கால கல்வெட்டு உள்ளது என்கின்றார் (சான்று  தினத்தந்தி 03-01-2019).

**சித்திரை மாதக் கணிப்பீடு :** சித்திரைப் புத்தாண்டு கணிப்பீட்டு முறையானது சாலிவாகணன் என்ற அரசனால் (சிலர் கனிஷ்கன் என்கின்றனர்) கி.பி 78-ம் ஆண்டளவில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது எனக் கூறப்படுகிறது. இவ்வாறு அக் காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்ட போதும்,''மக்களிடம் அந்தப் புத்தாண்டு வரவேற்புப் பெற்றிருக்கவில்லை என்பதனையே மேற்கூறிய கல்வெட்டுச் சான்றும், நாம் ஏற்கனவே பார்த்த வழக்காற்றுச் சான்றுகளும் காட்டுகின்றன. கடந்த இரு நூற்றாண்டுகளிலேயே மதப் புராணங்கள் மூலம் சித்திரை, புத்தாண்டாக எளிய மக்களிடம் திணிக்கப்பட்டுள்ளது.

**குழப்பத்திற்கான அறிஞர்களின் தீர்வு :** இக்குழப்பத்திற்கு தீர்வு காணும்பொருட்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1935இல் மறைமலை அடிகளார் தலைமையில் பல அறிஞர்கள் ஒன்றுகூடி தை முதலே தமிழ்ப் புத்தாண்டு என முடிவு செய்திருந்தனர். பின்பு அதேபோன்று திருவள்ளுவரின் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆங்கில ஆண்டுடன் 31 ஆண்டுகளைக்கூட்டி திருவள்ளுவர் ஆண்டு தமிழாண்டாகக் கொள்வது எனவும் அறிவித்திருந்தார்கள். இவ்வாறு  முடிவு செய்தவர்களில் தலையான தமிழ் அறிஞர்கள் பலர் இருந்தார்கள்.

